R4839

# DIVINE JUSTICE AND MERCY
# தெய்வீக நீதி மற்றும் கருணை

2 நாளாகமம் 23:1-20

“ தீமைகளை விட்டு ஓயுங்கள்; நன்மை செய்ய படியுங்கள்.” ஏசாயா 1:16,17

இந்த பாடத்தின் முக்கிய நபர், நல்ல ராஜாவாகிய எசேக்கியாவின் மகன், மனாசேயாகும். அவன் தனது பன்னிரண்டாவது வயதில் யூதாவின் ராஜ்ய பாரத்துக்கு வந்த ஒரு நல்ல ராஜாவின் கெட்ட மகன், நல்ல பிதாக்கள் கெட்ட மகன்கள், கெட்ட பிதாக்கள் நல்ல மகன்கள் என்ற இந்த காரியம் நல்ல அல்லது கெட்ட குணநலம் உடைய தாய்மார்களாலும், மற்றும் ராஜாவானவன் அரசாட்சி வேலையில் முழுமையாக ஈடுபட்டு, பிள்ளைகளின் வளர்ப்புக்கு சரியான கவனிப்பு கொடுக்காததினாலும் ஆகும். எனினும் சில விதிவிலக்கு ஒவ்வொரு கொள்கையிலும் இருக்கிறது. ஆனால் பெற்றோர்களுக்கு எதிராக பிரதிபலித்து, தப்பிக்கும் கிருபையான குழந்தைகளை தவிர்ப்பது இயலாததாகும்.

### பெற்றோர்களின் பொறுப்புகளின் புனிதத்தன்மையை எப்படி சிலர் உணர்கின்றனர்

பெற்றோரின் கடமை சந்தோகத்திற்கிடமில்லாமல் மானிட வாழ்க்கையில் உயர்ந்த மற்றும் மிகவும் முக்கியமான வேலையாகும். எனினும் சிலர் மட்டும் பெற்றோரின் பொறுப்புக்களின் புனிதத்தை எப்படி உணர்கின்றனர்! “அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ?” என்று தீர்க்கதரிசி கேட்கிறார். நமது இனத்தில் யாரும் பூரணர் இல்லை என்கிற அனுமானத்தை ஏற்றுக்கொள்ளும் போது, குழந்தைகளின் நல்ல மற்றும் கெட்ட குணங்களுக்கு பெற்றோர்கள் பெரும் பொறுப்பு ஏற்கிறார்கள் என்பதையும் ஏற்றுகொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பு திருமணத்திற்கு முன்பு இனச்சேர்க்கையில் உணரப்பட வேண்டும். சமதளத்தில் இருப்பு இனப்பெருக்கம் (**Stock Breeding**) போல் திருமணம் செய்யப்பட வேண்டும் என்றும் நுட்பமான உணர்வுகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தவில்லை. வாழ்க்கையின் முக்கியமான உடன்படிக்கையில் தெளிந்த புத்தியுள்ள ஆவி நாடப்பட வேண்டும். ஏனெனில் இது விதியை மாத்திரமல்ல, ஜோடி மற்றும் அவர்களது சந்ததியின் சந்தோஷத்தையும் பாதிக்கவல்லது.

பல்வேறு விதமான பழங்கள், மலர்கள் மற்றும் காய்கறிகளை பெறுவதற்கு அதிகமாக அக்கறை காட்டும் ஆராய்ச்சியாளர்கள், மனித இனத்தில் சரியான இலட்சியங்களை அடைய சரியான கவனம் செலுத்தப்படவில்லை என்பது வெட்கத்திற்குரியதாக இருக்கிறது. உண்மையிலேயே பெரும்பாலானவற்றில் சீர்மை இல்லை. குருட்டுத்தனமாக, மிருக உணர்ச்சி மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது.

நல்ல குதிரைகள், நாய்கள், கால்நடைகள் முதலானவற்றை வளர்ப்பவர், இனப்பெருக்கம் செய்யும் போது அதன் தாயின் உடல், மனநலம், அதன் சுற்றுப்புறம் ஆகியவற்றை எப்படி கவனிக்க வேண்டும் என்பது பற்றி விளக்குவார். ஆனால் மிருகங்களை இனப்பெருக்கம் செய்யக்கூடிய இவர்கள், மனைவிக்கு, தங்களது சொந்த குழந்தைகளின் தாய்க்கு சரியான கவனம் கொடுப்பதில்லை. இனப்பெருக்கம் செய்யும் பெண் குதிரைக்கு, ஓடும் குதிரைகளின் படங்கள், குதிரைப் பந்தையத்தை பார்த்தல் போன்றவை பிறக்கப்போகிற குட்டிக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பதை உணர்ந்த குதிரை ரசிகர்கள் இந்த கொள்கையை தனது மனைவிக்கு பயன்படுத்த தவறுவது எவ்வளவு விநோதமாக இருக்கிறது!

தாயானவள் குழந்தையை சுமக்கும் போது ஆயிரக்கணக்கான வழியில் பதற்றமும் எரிச்சலுடையவர்களாக இருக்கும் போது குழந்தைகள் பதட்டமாகவும் வெறித்தனமாகவும் இருப்பதில் ஆச்சரியம் இருக்கிறதா? குழந்தைகள் பரம்பரை உணர்வுகள், கோபம், சிற்றின்பம் ஆகியவற்றுடன் பிறப்பதற்கு காரணம் அவர்களது தாய்மார்களின் அனுபவங்கள் அவர்களிடம் பதிய வைக்கப்படுகிறது என்று நாம் நினைப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்த காரியங்களில் பெற்றோர்களின் சரியான தீர்மானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் அவர்களது பிள்ளைகளின் குணலட்சணங்களுக்கு சரியான அடித்தளமாக இருக்கும். இந்த அடித்தளத்தின் மேல் பொறுமையுடனும், ஜாக்கிரதையுடனும், அன்புடனும் தங்களது குழந்தைகளை நீதியின் உயர்ந்த தரநிலையில் சிருஷ்டிகரிடத்தில் விசுவாசம் மற்றும் பரிசுத்த அழகின் திசையில் அபிவிருத்தி செய்வார்கள். இது அனைவரது முயற்சியாக இருக்கும் போது, நாம் விரும்புகிற இந்த நிலைமைக்கு உலகத்தை எப்பொழுது கொண்டு வருகிறோம் என்ற நம்பிக்கை கொள்ளலாம். ஒரு போதும் நடக்காது! உலகமானது கர்த்தரின் உறுதியான வசனத்தின் அடிப்படையில் இல்லாததால் மரிக்கும் என்று நம்புங்கள். இந்த கர்த்தரின் வசனம், மேசியாவின் மாபெரும் ராஜ்யத்தில் பரத்திலிருந்து மனுக்குலத்திற்கு உதவி வரும் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறது.

### இன்னோம் பள்ளத்தாக்கு

மனாசே ராஜா, விக்கிரக ஆராதனையை மறுபடியும் கொண்டு வந்து, ஆலயத்தில் பாகாலுக்கு பலிபீடங்களைக் கட்டி, கெட்ட ஆவிகளுடன் மந்திரங்களையும் தொடர்புகளையும் ஏற்படுத்தினான். தேசமானது அவர்களது ராஜாவின் மூன்று தீர்மானத்தின்படி

நல்ல வழிக்கோ கெட்ட வழிக்கோ செல்ல தேவன் அனுமதித்தார். இப்படியாக ஜனங்கள் பாவம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து தண்டனை வந்தது. தண்டனையை நிறைவேற்ற கர்த்தர் அசீரியாவின் ராஜாவை அனுமதித்தார். அவன் பட்டணத்தை பிடித்து ராஜாவை கைதியாக கொண்டு சென்றான். விக்கிரக ஆராதனைக்கான தண்டனை நித்திய ஆக்கினை அல்ல. இந்த தப்பறையான கருத்து "இருண்ட யுகத்தில்" வந்தது. நாம் தேவனைப் பற்றியும் அவரது வார்த்தையைப் பற்றியும் சரியான புரிதலை பெற்றுக்கொண்டு வருகிறோம்.

ராஜா சில காலம் சிறையிலிருந்த பிறகு அவனுக்கு புத்தி வந்து பாடத்தை கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். அவனது நல்ல தகப்பனாகிய எசேக்கியாவைக் குறித்தும் அவன் பெற்ற தேவனுடைய ஆசீர்வாதத்தையும் குறித்தும் எண்ணங்கள் அவனது மனதிற்கு நிச்சயமாக வந்திருக்க வேண்டும். மனாசே வருத்தப்பட்டு தேவனிடம் மன்னிப்பைக் கோரி, அதை பெற்றான். அவனது ராஜ்யபாரத்திற்கு திரும்ப வந்தான்.

ராஜாவின் விக்கிர ஆராதனை குறித்த காரியங்கள் 2 நாளாகமம் 33:6இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. "அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரை தீக்கடக்கப்பண்ணினான்." இந்த பள்ளத்தாக்கு எருசலேமுக்கு வெளியே தெற்கு பக்கத்தில் இருந்தது. அது தற்போது ஓரளவுக்கு மூடப்பட்டு பழத்தோட்டமாகியிருக்கிறது. பழங்காலத்தில் அது பெரும்பள்ளத்தாக்காக இருந்தது. ஒரு காலத்தில் மத சடங்காச்சாரங்கள் செய்யப்பட்டு வந்த இடமாக இருந்தது. ஒரு பெரிய பித்தளை சிலை நிறுவப்பட்டது. அது உள்ளே கூடு போல வெறுமையாக இருக்கும். அதன் கீழே வாயு மூலம் எரியும் தீ கட்டப்பட்டது. அந்த சிலை நீட்டப்பட்ட கைகளை உடையதாக இருந்தது. அது உஷ்ணப்படுத்தப்பட்டு அதில் சில சமயம் குழந்தைகள் புறஜாதி தேவதைகளுக்கு பலி கொடுக்கப்பட்டனர். இது சர்வ வல்லவரின் அங்கீகாரத்திற்கு முற்றிலும் மாறானது.

அதன்பிறகு இந்த இன்னோம் பள்ளத்தாக்கு மாசுப்படுத்தப்பட்டதால் அது தொழுகைக்குரிய இடமாக பயன்படுத்தப்படவில்லை. அது எருசலேமின் குப்பை கூளங்களை எரிக்கக்கூடிய இடமாக பயன்படுத்தப்பட்டது. இறந்து போன நாய்கள், எலிகள் முதலானவை அங்கே வீசப்பட்டு எரிக்கப்பட்டது. மரண தண்டைக்குட்டவர்களின் உடல்களும் இங்கே போடப்பட்டு எரிக்கப்பட்டன. இது அவர்களுக்கு எதிர்கால வாழ்க்கை இல்லை என்பதை குறிப்பிட்டது.

புதிய ஏற்பாட்டில் "இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு" என்று கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இது கெ-ஹின்னோம் அல்லது இன்னோம் பிற்காலத்தில் கெஹென்னா என்று எழுப்பட்டிருக்கிறது. நமது கர்த்தர் இதை அநேகந்தடவை இரண்டாம் மரணத்திற்கு பயன்படுத்தியிருக்கிறார். தேவனுடைய கிருபையை வேண்டுமென்றே, தெரிந்தே, விடாப்பிடியாக மறுதலிக்கிறவர்களுக்கான இடமாக குறிப்பிடுகிறார்.

### நன்மை செய்ய படியுங்கள்

ஏசாயாவில் சொல்லப்பட்ட நமது வசனம், "தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மை செய்ய படியுங்கள்" என்பது கர்த்தருடைய அறிவுரையாக இருக்கிறது. இது நமது இனத்தின் மேல் தேவனுடைய பொதுவான மனோபாவத்தைக் குறிக்கிறது. நாம் பாவிகளாயிருப்பதால் தேவன் நம்மிடம் கோபிப்பதில்லை. ஏனெனில் நாம் துர்குணத்தில் உருவானோம் என்றும் நமது தாய்மார்கள் நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தார்கள் என்றும் தேவனே விவரிக்கிறார். ஆகையால் நாம் நமது தவறான நிலைமையை உணர்ந்து மனந்திரும்பி, நம் திரணிக்குத்தக்கதாக நன்மை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த மறுரூபமாகுதலை நல்ல சித்தமும் சுத்தமான இருதயமும் அல்லது நீதிக்கான நேர்மையான முயற்சியும் இல்லாமல் நாமே செயல்பட்டு விளைவை ஏற்படுத்த முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு உதவியை, ஒத்தாசையை, நமது இரட்சகருக்குள் அவர் நமக்காக கொடுத்திருக்கிறார். விசுவாசத்தினால் அவரையும் அவரது வார்த்தையையும் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு முன்னரே அவர் உதவிகரமாக இருக்கிறார். அவரது இராஜ்யத்தை நிறுவுவதின் மூலமாக மனுக்குலம் அனைத்திற்கும் ஒத்தாசை பண்ணுபவராக இருப்பார். முடிவாக நீதியை நேசித்து அக்கிரமத்தை வெறுக்கிற அனைவரும் நித்திய ஜீவனை அடையும்படி செய்யப்படும். அக்கிரமத்தை சிநேகித்து நீதியை வெறுக்கிற அனைவரும் இரண்டாம் மரணமாகிய தண்டனையை அடைவார்கள். "அவர்கள் அவருடைய மகிமை பொருந்திய மகிமையிலிருந்து நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." அது கெஹென்னா என்று அடையாளமாக குறிப்பிடப்படுகிறது.